இப்படிப்பட்ட சிக்கல்களைத் தீர்த்துவிட முடியுமென்று நான் கருதுகிறேன். அதற்கான முயற்சியிலே விவசாயத் துறையாவது அல்லது போக்குவரத்துத் துறையாவது ஈடுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, விவசாயத் துறை, போக்குவரத்துத் துறை மட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுகின்ற நல்ல ஆலோசனையை அமல் செய்ய லோகல் அட்மினிஸ்ட்ரேஷன்—உள்ளாட்சித் துறையையும் இணைக்க வேண்டும். உள்ளாட்சித் துறையிடமும் விவசாயத் துறையிடமும் போக்குவரத்துத் துறை இதுபற்றிக்கூறி நடவடிக்கை எடுக்க முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. ர.ச. தங்கவேல்: பேரவைத் தலைவரவர்களே, பஞ்சாயத்து யூனியன் ரோடுகளில், சில விவசாயிகள் ரோட்டைக் குறுக்கே வெட்டி தண்ணீரைக் கொண்டு போகிறார்கள். அப்படி ரோடு ஓரத்திலே இருக்கும் வாய்க்கால்களைத் தூர்த்து, நெல் அடிக்கக் கொடுத்தால் திருப்தி அடைவார்கள். இதன்மேல் அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, விவசாயிகளின் நலன் கருதி அதற்குத் தடை ஏதும் அரசு விதிக்காது. ஆனால் தண்ணீரை சாலையின் ஒரு பகுதியிலிருந்து மறு பகுதிக்குக் கொண்டு செல்லும்பொழுது பழுதுபட்ட சாலையாக இருந்தால், பழுதடைந்த நிலையிலே இருந்தால் அவற்றைச் செப்பனிட வேண்டுமென அரசு உத்தரவிட்டிருக்கிறது.

கள்ளக்குறிச்சியில் மணிலா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை

*வினா எண் 413—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்; மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெருவாரியாக மணிலா பயிரிடப்படும் தென் ஆற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியில் தொழில் இணையகத்தின் மூலம் ஒரு மணிலா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை துவங்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

1979 மார்ச் 15]

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டிலேயே வட ஆற்காடு மாவட்டத்திற்கு அடுத்தபடியாக தென்னாற்காடு மாவட்டத்தில் தான் மணிலா அதிகமாகக் கொள்முதல் செய்யப்படுகிறது. குறிப்பாக, கள்ளக்குறிச்சியில் மட்டும் ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் மூட்டைகள் மணிலா கொள்முதல் செய்யப்படுகிறது, எனவே, அங்கு மணிலா சுத்திகரிப்பு ஆலை துவங்க செயற்குறிப்பு இல்லையென்று அதிகாரிகள் சொன்ன காரணங்கள் யாவை. அப்படியே அதிகாரிகள் சொன்னாலும் பொதுமக்கள் பிரதிநிதி களாக இருக்கிற நாங்கள் சொல்கிறோம் வேண்டுமென்று; ஆகவே, அங்கு சுத்திகரிப்பு ஆலை துவங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவ ரவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் விருத்தாசலம் என்னுமிடத்தில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கழகத்தினால் (Tamil Nadu Co-operative Marketing Federation) ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவப்பட்டுள்ளதாலும், மணிலா எண்ணெய் சுத்திகரிப்பு மத்திய அரசினால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாலும், மேலும் ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை தென்னாற்காடு மாவட்டத்தில் ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

கூவனூற்று கிராமத்தில் குட்டை அமைப்புத் திட்டம்

*வினா எண் 414—திரு. மெ. ஆண்டி அம்பலம்; மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுரை மாவட்டம், கூவனூற்று கிராமம் நொச்சியாற்றின் குறுக்கே பொதுப்பணித் துறையால் மதிப்பீடு தயார் செய்யப் பட்டு நிறைவேற்றப்படாமல் உள்ள குட்டைத் திட்டத்தை நிறைவேற்ற அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இது ஒரு சிக்கன மற்ற திட்டமானதாலும், 1978-79ஆம் ஆண்டில் இதனை எடுத்துக் கொள்வதற்கு வருவாய் வாரியத்தின் ஒத்திசைவு இல்லையாதலாலும் இத்திட்டம் இவ்வாண்டு எடுத்துக்கொள்ளப் படவில்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: தலைவரவர்களே, சாணார் பட்டி ஒன்றியம் ஏமக்கலாபுரம் கிராமத்தில் சர்வே நெம்பர் 550-ல் ஒரு குட்டைத்திட்டம் போட ஆய்விலுள்ளது. எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்? இவ்வேலைக்கு நஷ்டக்கணக்கு வருமானால் நில உரிமையாளர்கள் தங்கள் நிலத்தை அதற்குத்